செ.வெ.எண்: 23/அக்டோபர் நாள்: 17.10.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**
**பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்**
**விடுபட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-17ம் ஆண்டு முதல் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல், மிளகாய், பயறுவகை பயிர்கள், எண்ணெய்வித்து பயிர்கள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 2016-17ம் ஆண்டில் 1,20,816 விவசாயிகளுக்கு காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக ரூ.533.5 கோடி, 2017-18ம் ஆண்டில் 1,44,803 விவசாயிகளுக்கு ரூ.472.182 கோடி, 2018-19ம் ஆண்டில் 82,106 விவசாயிகளுக்கு ரூ.304.625 கோடி மற்றும் 2019-20ம் ஆண்டிற்கு 2727 விவசாயிகளுக்கு ரூ.3.8 கோடி ஆக மொத்தம் ரூ.1314.11 கோடி இதுவரையிலும் இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 2018-19ம் ஆண்டில் நெல் பயிருக்கு காப்பீட்டுத் தொகை நிலுவை உள்ள 117 வருவாய் கிராமங்களுக்கும் மற்றும் 2018-19ம் ஆண்டில் 5 ஹெக்டேருக்கு மேல் காப்பீடு செய்து காப்பீட்டுத் தொகை நிலுவையில் உள்ள 6901 விவசாயிகளுக்கும் விரைவில் இழப்பீடு பெற்று வழங்குவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**